**ந.க.எண்.அ1/1814/2025 (ம–IV)** **நாள். 10.06.2025**

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**
**வார்டு குழு அலுவலகம் –IV**

# ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
# பஞ்சப்பூரில் உள்ள கனரக சரக்கு வாகன முனையம்

| வ. எண் | குத்தகை இனம் விபரம் | கடை கள் / அலுவலகம் எண்ணிக் கை | கடை கள் / அலுவலகம் அளவு | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தரைத்தளம் கடை எண். 24,25,26 மற்றும் 51 (மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும்) | 4 | 250 சதுர அடி வரை | 4,00,000/– |
| 2 | தரைத்தளம் கடை எண். 1 முதல் 9 வரை<br>தரைத்தளம் கடை எண். 11 முதல் 17 வரை<br>தரைத்தளம் கடை எண். 19 முதல் 23 வரை<br>தரைத்தளம் கடை எண். 27 முதல் 35 வரை<br>தரைத்தளம் கடை எண். 37 முதல் 50 வரை<br>முதல்தளம் கடை எண். 3, 4, 22, 23, 25 மற்றும் 26 (அலுவலக பயன்பாட்டிற்கு) | 50 | 251 முதல் 500 சதுர அடி வரை | 7,00,000/– |
| 3 | தரைத்தளம் கடை எண். 10, 18 மற்றும் 36<br>முதல்தளம் கடை எண். 1 முதல் 2 வரை<br>முதல்தளம் கடை எண். 5 முதல் 7 வரை<br>முதல்தளம் கடை எண். 9 முதல் 10 வரை<br>முதல்தளம் கடை எண். 19 முதல் 20 வரை<br>முதல்தளம் கடை எண். 24, 27 மற்றும் 28 (முதல்தளம் அனைத்தும் அலுவலக பயன்பாட்டிற்கு) | 15 | 501 முதல் 1000 சதுர அடி வரை | 8,00,000/– |
| 4 | முதல்தளம் கடை எண். 8, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 மற்றும் 21 (அலுவலக பயன்பாட்டிற்கு) | 10 | 1001 சதுர அடிக்கு மேல் | 10,00,000/– |

மேற்கண்ட இனத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் வார்டு குழு அலுவலகம்–IV ல் கீழ்கண்ட விபரப்படி நடத்தப்படும்.

| | |
|---|---|
| ஏலம் நடக்கும் இடம் / ஒப்பந்தப்புள்ளி பெறும் இடம் | வார்டுகுழு அலுவலகம் – IV<br>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி<br>அரசு சுற்றுலா மாளிகை சாலை,<br>டி.வி.எஸ்.டோல்கேட்,<br>திருச்சிராப்பள்ளி 620020 |
| பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தேதி | 04.07.2025 வெள்ளிக் கிழமை |
| ஒப்பந்தப்புள்ளி பெறும் நேரம் | 04.07.2025 வெள்ளிக் கிழமை, காலை 10.45 மணி வரை |
| பொது ஏலம் நடைபெறும் நேரம் | 04.07.2025 வெள்ளிக் கிழமை, காலை 11.15 மணி முதல் |
| பொறுப்புத் தொகை செலுத்துதல் (பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மட்டும்) | 03.07.2025 வியாழக் கிழமை, மாலை 5.00 மணி வரை<br><br>ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே வங்கி வரைவோலையாக "ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி" என்ற பெயரில் செலுத்துதல் வேண்டும்.<br>(ரொக்கமாகவோ அல்லது காசோலையாகவோ பெறப்படமாட்டாது) |

(த.பி.பா.)

**குத்தகை உரிமம் – பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி இனங்களுக்கான நிபந்தனைகள்**

- ஒவ்வொரு கடைகளுக்கும் உரிய பொறுப்புத் தொகையை வங்கி கேட்பு வரைவோலை மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்–IVல் செலுத்தி அதற்கான அத்தாட்சியை பெறுதல் வேண்டும். இவ்வாறு தகுந்த அத்தாட்சி பெற்ற நபர்கள் மட்டுமே நடைபெறும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இதர நபர்கள் அனுமதிக்கப்படமாட்டர்கள்.

- ஒப்பந்தப்புள்ளி கோர விரும்புவர்கள் உரிய விண்ணப்ப படிவத்துடன் பொறுப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையை (Demand Draft) இணைத்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஒவ்வொரு கடைகளுக்கும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர விரும்புவோர் ஏலத்திற்கு தனியாகவும், ஒப்பந்தப்புள்ளிக்கு தனியாகவும் பொறுப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

- ஏலம் தொடர்பான இதர விபரங்களை அறிய விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வார்டுகுழு அலுவலகம் IVல் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

- பொது ஏலம் முடிந்த பின்னர் மேற்படி இனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தனித்தனியாக வகைப்படுத்தி, வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் முன்னிலையில் வெளிப்படையாக திறக்கப்படும்.

- ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி எதில் அதிகபட்சமாக கேள்வித்தொகை கேட்கப்படுகிறதோ அதையே உயர்ந்தபட்ச கேள்வியாக கருதி அதனடிப்படையில் மாமன்றத்தின் பரிசீலனைக்குட்படுத்தி முடிவு செய்யப்படும்.

- ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விண்ணப்படிவம், ஏல விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏல நிபந்தனைகள் மற்றும் பொதுக்கட்டுப்பாடுகள் அடங்கிய கையேட்டினை ஏல தேதிக்கு முன்தினம் வரை வார்டுகுழு அலுவலகம் IVல் ரூ. 590/– ( ரூ. 500+ரூ.90) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

- பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி இனங்களின் விவரங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் வார்டுகுழு அலுவலகங்கள் – 1, 2, 3, 4 மற்றும் 5 கோட்ட அலுவலகங்களின் அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் பங்கு கொள்ள விருப்பமுள்ளவர்கள் இவ்விளம்பரத்தினை பார்வையிட்டு தெரிந்து கொண்டு, அலுவலக நடைமுறையில் உள்ள ஏலம் / ஒப்பந்தப்பள்ளி விதிகளுக்குட்பட்டு பங்கேற்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

- ஒவ்வொரு கடையின் அளவுகள் பற்றிய விபரம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் IV கோட்ட அலுவலகத்திலும், கனரக வாகன முனைய வளாகத்தில் நேரில் பார்வையிட்டும் அறிந்து கொள்ளலாம். மேலும் இடத்தை நேரில் பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி